# தகவல் தாள்

## குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை

இந்தத் தகவல் தாளில் *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் காணப்படும் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை பற்றிய பொதுவான தகவல்கள் உள்ளடங்குகின்றன. *குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை தொடர்பான மத்திய அரசின் படிப்படியான வழிகாட்டுதல்கள்* என்றழைக்கப்படுகின்ற நீதித் துறையின் கையேடு குறித்தும் நீங்கள் அறிந்துகொள்ள விரும்பலாம். இந்தக் கையேடு குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை நீங்கள் தீர்மானிக்க உதவும் வகையில் 8 இலகுவான படிமுறைகளை அளிக்கிறது.

### குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை என்றால் என்ன?

விவாகரத்துச் செய்த பின்பு அல்லது பிரிந்த பின்பு பெற்றோரில் ஒருவர் தனது குழந்தைகளுக்கு நிதி சார்ந்த ஆதரவை அளிக்கும் பொருட்டு தன்னுடைய மற்றொரு துணைவருக்கு வழங்குகின்ற பணமே "குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையாகும்."

### பிரிந்த பின்பு அல்லது விவாகரத்து செய்த பின்பு பெற்றோர்கள் இருவரும் தங்களுடைய குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமா?

ஆம். குழந்தைளுக்கு அவர்களின் பெற்றோர்கள் இருவரிடமிருந்தும் நிதி சார்ந்த ஆதரவைப் பெறுவதற்குச் சட்டப்படியான உரிமை இருக்கிறது மற்றும் பெற்றோர்களாகிய உங்கள் இருவருக்கும் இந்தக் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை வழங்குவதற்கு சட்டப்படியான பொறுப்பும் இருக்கிறது. விவாகரத்து அல்லது பிரிவு


Canada

ஏற்பட்டு விட்டது என்பதால் தற்போதுள்ள குழந்தைப் பராமரிப்புக்கான பொறுப்பிலிருந்து நீங்கள் விலகிவிட முடியாது.

## பெற்றோரில் ஒருவரிடமிருந்து குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை எனக்கு அவசியமில்லையென்றால் என்ன செய்ய வேண்டும்?

குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை என்பது ஒரு குழந்தையின் உரிமை ஆகும் மற்றும் சட்டப்படி இது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். உங்களுடைய குழந்தைகளின் தொடர்ச்சியான நிதி சார்ந்த ஆதரவுக்கு நியாமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என நீதிபதிகள் கருதும் பட்சத்தில் அவர்கள் உங்களுக்கு விவாகரத்து அளிக்க மறுக்கக்கூடும்.

## குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை நான் எவ்வாறு கணக்கிடலாம்?

குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையானது குழந்தைப் பராமரிப்பு தொடர்பான வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் கணக்கிடப்படுகிறது. குழந்தைப் பராமரிப்பு தொடர்பான வழிகாட்டுதல்கள் என்பது விதிகளின் தொகுப்பு மற்றும் தொகைகளின் அட்டவணைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

*குழந்தைப் பராமரிப்பு தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்களும்* (*விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் வரும் ஒழுங்குமுறைகள்), மாகாண/பிராந்திய வழிகாட்டுதல்களும் (மாகாண அல்லது பிராந்திய சட்டங்களின் கீழ் வரும் ஒழுங்குமுறைகளும்) இங்கு உள்ளன. இதில் எதைப்பயன்படுத்த வேண்டும் என்பது சூழ்நிலையைப் பொறுத்து அமையும்.

- பெற்றோர்கள் இருவரும் குறித்தறிவிக்கப்பட்ட ஒரே மாகாணத்தில் வசிக்காத வரையில் எல்லா விவாகரத்து வழக்குகளுக்கும் *குழந்தைப் பராமரிப்பு தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்கள்* (மத்திய அரசின் வழிகாடடுதல்கள்) பொருந்தும். விவாகரத்துக்

கோரும் பெற்றோர் இருவரும் நியூ ப்ரன்ஸ்விக், மேனிடோப்பா மற்றும் கியூபெக் ஆகிய குறித்தறிவிக்கப்பட்ட மாகாணங்களில் வாழ்ந்து கொண்டிருந்தால், அந்த மாகாணங்களுக்குரிய சொந்த வழிகாட்டுதல்கள் இதற்குப் பொருந்தும்.

- திருமணம் செய்து கொள்ளாத பெற்றோர்கள் பிரிகின்ற போதும் மற்றும் திருமணமான பெற்றோர்கள் விவாகரத்து செய்யாமல் பிரிகின்ற போதும் மாகாண அல்லது பிராந்திய வழிகாட்டுதல்கள் பொருந்தும்.

## மத்திய அரசின் வழிகாட்டுதல்களுக்கும், மாகாண/பிராந்திய வழிகாட்டுதல்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

கியூபெக் தவிர எல்லா மாகாணங்களும், பிராந்தியங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதல்களை அதிகம் ஒத்ததாக இருக்கும். இவை ஒரு குழந்தைப் பராமரிப்பு தொடர்பான வழிகாட்டுதல்களையும் கொண்டிருக்கும். கியூபெக் மாகாணமானது தனது சொந்த குழந்தைப் பராமரிப்பு தொடர்பான மாதிரியைக் கொண்டுள்ளது. விதிமுறைகள் சில ஆளுகை எல்கைகளில் சற்று வித்தியாசப்படலாம். ஆனால் கியூபெக் மாகாணத்தைத் தவிர இவையனைத்தும், மத்திய அரசின் அட்டவணைகளையே பயன்படுத்துகின்றன. ஆதலால், அடிப்படைத் தொகைகள் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

## நானும் மற்றொரு பெற்றோரும் எங்களுடைய குழந்தைளின் பராமரிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்தால், பொருந்தக்கூடிய குழந்தைப் பராமரிப்பு தொடர்பான வழிகாட்டுதல்களை நாங்கள் பின்பற்ற வேண்டுமா?

குழந்தைப் பராமரிப்பு தொடர்பான வழிகாடடுதல்கள் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகைகளை நிர்ணயிப்பதற்கான சட்டங்களாகும். பெற்றோர்கள் என்ற ரீதியில், நீங்கள் இருவரும் உங்களுடைய குழந்தைகளுக்கு குறைந்த அளவு அல்லது உயர்ந்த அளவு என்றில்லாமல் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் எது சிறந்தது என்ற அளவில் மற்றொரு குழந்தைப் பராமரிப்புத்

தொகையை அளிக்க முடிவு செய்து கொள்ளலாம். ஆனால், ஒரு குழந்தைக்கு பலன் தரும் வகையில் அமைந்த *சிறப்பு ஏற்பாடுகள்* இல்லாத பட்சத்தில், நீங்கள் ஒரு நீதிபதியை குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்வீர்களேயானால், அந்த நீதிபதி வழிகாட்டுதல்களின் படி குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை முடிவுசெய்வார்.

உதாரணமாக, பெற்றோரில் ஒருவர் குடும்ப வீடு அல்லது ஒரு வாகனம் போன்ற சொத்துக்களின் மீதான தனது உரிமையை மற்ற துணைவருக்கு நஷ்டஈடுகளின்றி மாற்றிக் கொடுக்கும் பட்சத்தில், அது குழந்தைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக நன்மை பயக்கலாம். பெற்றோர்கள் ஒரு குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை முடிவு செய்யும் போது இத்தகைய சிறப்பு ஏற்பாடுகளை கருத்திற்கொள்ள பெற்றோர்கள் விரும்பலாம்.

## குழந்தைப் பராமரிப்பு தொடர்பான உதவித் தொகையை எப்போது நிறுத்தலாம்?

உங்களுக்கு ஏற்கனவே குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை தொடர்பான ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது உங்களிடம் எழுத்துப்பூர்வமான ஓர் ஒப்பந்தம் இருக்குமானால், அவை எப்போது குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை நிறுத்தலாம் என்பதைக் குறிப்பிடலாம். உதாரணமாக, ஒரு குழந்தை குறிப்பிட்டவொரு வயதை அடையும் போது மாத்திரம் உதவித் தொகையை நிறுத்தலாம் என உங்களுடைய குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை தொடர்பான ஆணை அல்லது ஒப்பந்தம் குறிப்பிடலாம். உங்களுடைய குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை தொடர்பான ஆணை அல்லது ஒப்பந்தம் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை எப்போது நிறுத்தலாம் எனக் குறிப்பிடவில்லையெனில், ஒரு நீதிமன்றத்தால் அந்த ஆணை மாற்றப்படும் வரையில் அல்லது நீங்களும், உங்களுடைய மற்றொரு துணைவரும் உங்களுடைய ஒப்பந்தத்தை மாற்றும் வரையில் அந்தக்

குழந்தைப் பராமரிப்பு உதவித் தொகையை நீங்கள் தொடந்து வழங்க வேண்டும்.

**என்னுடைய மற்ற துணைவரிடம் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை வழங்குவதைத் தவிர்த்து அதை குழந்தைக்கு நேரடியாக நான் வழங்கலாமா?**

குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை பொதுவாக மற்ற துணைவரிடமே வழங்கப்படுகிறது மற்றும் அது குழந்தையிடம் வழங்கப்படமாட்டாது. அரிதான சந்தர்ப்பங்களில், நீதிபதிகள் அந்தக் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை பருவ வயதையுடைய அல்லது பருவ வயதைத் தாண்டிய குழந்தைக்கு நேரடியாக செலுத்த வேண்டும் என ஆணை பிறப்பிக்கலாம். இவ்வாறு நேரடியாக குழந்தைக்குப் பராமரிப்பு உதவித் தொகையை வழங்குவது பொருத்தமானதா என்பதைத் தீர்மானிப்பதற்கு நீதிபதிகள் குடும்ப சூழ்நிலையைக் கருத்திற்கொள்வார்கள்.

**புதிய ஒரு துணைவருடன் எனக்கு குழந்தைகள் இருந்தால், முந்தைய திருமண உறவின் மூலம் வந்த குழந்தைகளுக்கு நான் இன்னமும் குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை வழங்க வேண்டுமா?**

அத்தகைய பெற்றோர்களுக்கு புதிய குடும்பப் பொறுப்புக்கள் இருந்தாலும் கூட, அவர்களின் முந்தைய குழந்தைகளுக்கு நிதி ரீதியாக தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும். குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகை தொடர்பான தற்போதைய ஆணையானது அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி வரை அல்லது ஒரு நீதிமன்றத்தால் அந்த ஆணை மாற்றப்படும் வரை அமலில் இருக்கும்.

அளவுக்கு மீறிய கஷ்டம் தொடர்பாக ஒரு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் மத்திய அரசின் வழிகாட்டுதல்களின் கீழ், ஒரு வேறுபட்ட குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை வழங்குமாறு நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கக்கூடும். புதிய திருமண

உறவிலிருந்து வந்த குழந்தைகளின் பராமரிப்புப் பொறுப்புக்கள் இந்த அளவுக்குமீறிய கஷ்டத்திற்குக் காரணமாக அமையலாம். பெற்றோர் ஒருவர் அளவுக்கு மீறிய கஷ்டத்தை அனுபவிக்கிறார் அல்லது ஒரு குழந்தை அளவுக்கு மீறிய கஷ்டத்தை அனுபவிக்கிறது என்பதைத் தீர்மானிக்க, இரண்டு படிமுறைகள் உள்ளன.

- தேவையான குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை வழங்குவதை மிகவும் கடினமாக்கும் உங்களுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளை நீங்கள் முதலில் சுட்டிக்காட்ட வேண்டும்.
- குழந்தைப் பராமரிப்புக்கான உதவித் தொகையை மாற்றுமாறு கோருகின்ற பெற்றோரின் குடும்பம் அவருடைய முந்தைய துணைவரின் குடும்பத்தைப் பார்க்கிலும் குறைந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ளதா என்பதைப் பார்ப்பதற்காக இரண்டு குடும்பங்களின் வாழ்க்கைத் தரங்களும் ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.

***விவாகரத்து மற்றும் பிரிதல் பற்றிய மேலும் பல தகவல்களை இலவசமாக கனடாவின் நீதித்துறையிலிருந்து வரும் இந்தக் குறுகிய வீடியோவின் மூலம் அல்லது கீழ்க்காணும் எமது இணையதளத்தில் பிரவேசிப்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம்:***

***Canada.ca/family-law***

பொறுப்புத்துறத்தல்: இது ஒரு சட்ட நூல் அல்ல மற்றும் இது சட்ட ஆலோசனையை வழங்காது. குடும்பச் சட்டம் சிக்கல் வாய்ந்தது என்பதால், தனிநபர்கள் வழக்கமாக குடும்பச் சட்டத்திற்கான ஒரு வழக்கறிஞரிடமிருந்து தங்களுடைய நிலைமை குறித்த ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகச்சிறந்ததாகும். இந்த வழக்கறிஞர்கள், உரிமைகளையும், கடமைகளையும் பற்றிய சட்டரீதியான ஆலோசனையை வழங்குவதில் சிறந்தவர்களாக இருப்பார்கள். பெரும்பாலான மாகாண மற்றும் பிராந்திய வழக்கறிஞர் சங்கங்கள் பொருத்தமான வழக்கறிஞரைப் பரிந்துரை செய்யும் சேவைகளை வழங்குகின்றன. சில வழக்கறிஞர்கள் இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ ஓர் ஆரம்பக்கட்ட சட்ட ஆலோசனையை வழங்கலாம் அல்லது தனிநபர்கள் தங்களது குறிப்பிட்ட சூழ்நிலையின்

ஒரு சில அம்சங்கள் தொடர்பாக ஒரு சில நேரங்களில்  வழக்கறிஞர் ஒருவரைக் கலந்தாலோசிக்க முடிவு செய்யலாம்.